**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காரியாபட்டி**

முன்னிலை: திரு. G. யோகேஷ்வரன்., B.A., L.L.B,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், காரியாபட்டி

2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 1–ம் நாள் திங்கட்கிழமை

**இடைநிலை மனு எண்.1/2025**

உள்

**அசல் வழக்கு எண்.224/2024**

1. இந்திரா
2. அருணா ...மனுதாரர்கள்/ வாதிகள்

/எதிர்/

1. சுப்பம்மாள்(இறந்து விட்டார்)
2. பழனி
3. வைரமுத்து
4. முனீஸ்வரி
5. P.பாண்டியராஜா
6. முனீஸ்வரன்
7. சார்பதிவாளர் எண்.2
   சார்பதிவாளர் எண்.2 அலுவலகம், விருதுநகர்
8. மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்)
   விருதுநகர் பதிவு மாவட்டம்,
   விருதுநகர் பதிவு மாவட்ட அலுவலகம்,
   விருதுநகர்
9. தாசில்தார், அலுவலகம் தாலுகா,
   விருதுநகர்.
10. மாவட்ட ஆட்சியர்,
    விருதுநகர் மாவட்டம், விருதுநகர். ........1 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/
    1 முதல் 10 பிரதிவாதிகள்

இம்மனுவானது இறுதியான விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின் முன்னர் 17.04.2026 ம் தேதி வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R. குமரவேல், M.Com.,M.L., அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையிலும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜர் இல்லாததால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ள நிலையிலும், 5,6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்

திரு.V.குருசாமி, B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 7 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகி எதிருரை தாக்கல் இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையிலும், இருதரப்பும் செய்து கொண்ட இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

1. காலவரையறை சட்டம் 5–ன் கீழ் அசல் வழக்கில் இறந்து போன 1ம் பிரதிவாதிக்கு உரிய காலத்தில் வாரிசு சேர்க்காததால் 2047 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தவிட வேண்டி இம்மனு தாக்கல்.

**2. .மனுதாரர்கள் /வாதிகள் தரப்பு மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், மனுதாரர்கள் பிரதிவாதிகள் மீது விளம்புகை பரிகாரம் கோரி மனு தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி கடந்த 03.01.2018ம் தேதியன்று இறந்துவிட்டார். இறந்து போன 1ம் பிரதிவாதியின் கணவர் 2ம் பிரதிவாதி மற்றும் அவரது மக்கள் 3 முதல் 6 பிரதிவாதிகள் ஆவார்கள். எனவே, மேற்படி அசல் வழக்கில் இறந்துபோன 1ம் பிரதிவாதியின் வாரிசுகளான 2 முதல் 6 பிரதிவாதிகளை அசல் வழக்கில் உரிய காலத்தில் வாரிசு சேர்க்காததால் 2047 நாட்கள் காலதாமதமாகி விட்டதை மன்னித்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3). 5,6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:-**

5,6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில், 1ம் பிரதிவாதி இறந்து போய் 7 வருடங்கள் ஆகியுள்ள நிலையில் இறந்துபோன நபர் மீது பொய்யான காரணங்களை கூறி வாதிகள் அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள். மேலும், உரிய காலத்தில் வாரிசு சேர்க்காமல் 2047 நாட்கள் காலதாமதம் ஆகியுள்ளதாக கூறியுள்ள நிலையில் என்ன காரணத்தால் காலதாமதம் ஏற்பட்டது

என்று எந்த விளக்கமும் மனுதாரர்கள் மனுவில் கூறவில்லை. எனவே, மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது இந்த எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. மனு, அபிடவிட் மற்றும் எதிருரை பரிசீலிக்கப்பட்டது. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. அவ்வாறே சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**7. தீர்வு முடிவு:-**

7(1). வழக்கு ஆவணங்களை பரிசீலணை செய்கையில், அசல் வழக்கானது, பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரத்திற்காக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது. இந்த மனுவானது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், இறந்துபோன 1ம் பிரதிவாதியின் வாரிசுகளான 2 முதல் 6 பிரதிவாதிகளை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. ஆனால், 5,6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் 1ம் பிரதிவாதி இறந்து போய் 7 வருடங்கள் ஆகியுள்ள நிலையில் இறந்துபோன நபர் மீது பொய்யான காரணங்களை கூறி வாதிகள் அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் மேலும், உரிய காலத்தில் வாரிசு சேர்க்காமல் 2047 நாட்கள் காலதாமதம் ஆகியுள்ளதாக கூறியுள்ள நிலையில் என்ன காரணத்தால் காலதாமதம் ஏற்பட்டது என்று எந்த விளக்கமும் மனுதாரர்கள் மனுவில் கூறவில்லை.

7(2). அசல் வழக்கில் மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின் போது 1ம்பிரதிவாதி கடந்த 03.01.2018ம் தேதியன்று இறந்துபோய்விட்ட விவரமானது 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் கடந்த

22.10.2024ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் மெமோ தாக்கல் செய்த பின்பு தான் தனக்கு தெரிய வந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மேலும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவானது இறந்துபோன 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்க 2047 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்துள்ளார்கள். உண்மையிலேயே மனுதாரர்கள் தரப்பிற்கு 1ம் பிரதிவாதி இறந்துபோய்விட்ட விவரம் தெரிந்திருந்தால் அவரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்த்துக்கொண்டு அவருக்கும் இந்நீதிமன்றத்திலிருந்து சம்மன் அனுப்பி வைக்க வேண்டிய அவசியமில்லை என்றும், அவரது வாரிசுகளை மட்டுமே தரப்பினராக சேர்த்திருப்பார்கள் என்றும் தெரியவருகிறது. இதிலிருந்து மனுதாரர்கள் தரப்பு வாதமானது வலுப்பெற்று அமைந்துள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆனால், அசல் வழக்கின் பிராதில் ஏற்கனவே இறந்துபோன 1ம் பிரதிவாதியின் வாரிசுகளாக 2 முதல் 6 பிரதிவாதிகள் சேர்க்கப்பட்டுள்ளனர். எனவே, அசல் வழக்கின் பிராதில் 1ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்று மட்டுமே சீர்திருத்தம் செய்தால் போதுமானதாக இருக்கும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி மனுவை அனுமதிக்கும் பட்சத்தில் அது பிரதிவாதிகளுக்கு அநீதி ஏதும் விளைவிக்கப்படமாட்டாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, நீதியின் நலன் கருதி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவானது அனுமதிக்கப்படுகிறது.

**<u>இறுதிமுடிவு:-</u>**

முடிவாக, இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஜுன் மாதம் 1 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

மாவட்ட உரிமையியல் மற்றும் ,
நீதித்துறை நடுவர்,
காரியாபட்டி.